## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# ...அவர்(கர்த்தர்) ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.

ஏசாயா-28:29

2018
ஜூன் மாத
செய்தி மலர்

இதழ் : 2
மலர் : 15



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மே மாதம் முழுவதும் நம்மை வழிநடத்தின தேவன் வரும் ஜீன் மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்திபடுத்தி வழி நடத்துவார்.

பெரிய தீர்க்கதரிசியாகிய ஏசாயா சொன்னார் "அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர் செயலில் மகத்துவமானவர் என்று (ஏசா–28:29)

ஆம் பிரியமானவர்களே, ஜீன் மாதம் வந்தாலே நம் பிள்ளைகளுக்கு எந்தக் கல்லூரியல் இடம் வாங்கலாம், எந்த மேற்படிப்பு படிக்க வைக்கலாம் அவர்களின் எதிர்கால வாழ்வு எப்படியிருக்கும் என்றெல்லாம் மனம் குழம்பி போய் யாரிடம் ஆலோசனைக் கேட்கலாம என்று கலங்கி நிற்கிறோம். மனங்கலங்காதிருங்கள் நம் தேவன் ஆலோசனையில் ஆச்சரியமானவர் அதுமட்டுமல்ல அவர் செயலில் மகத்துவமானவர். நமக்கு வேண்டிய சரியான ஆலோசனைகளை சரியான விதங்களில் நமக்கு வெளிப்படுத்தி மகத்துவமான செயல்களை நம் வாழ்க்கையில் செய்வார்.

கர்த்தரை மாத்திரம் நாம் உறுதியாய் பற்றிக்கொள்வோம். "உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், கர்த்தராகிய யேகோவா நித்தியக் கன்மலையாயிருக்கிறார். கர்த்தாலே எங்களுக்கு சமாதானத்தைக் கட்டளையிடுவீர். எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்தி வருகிறவர் நீரே" (ஏசாயா–26:3,4,12)

இனி கீழ் வரும் பகுதிகளில் எப்படியெல்லாம் தேவ மனிதர்கள் கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டு அவருடைய ஆலோசனைகளைக் கேட்டு தங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார்கள் என்பதைப் பார்ப்போம்.

## 1.மோசேயைப் போல .....

மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுதலை செய்து கானான் தேசத்தை நோக்கி பயணம் செய்தபோது ஆண்டவரிடம் ஒரு ஆலோசனைக் கேட்டான். ஆண்டவரே இந்த ஜனங்களை அழைத்துக்கொண்டு போ என்றும் என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது என்று சொன்னீரே. இதை நான் எப்படி உறுதி செய்து கொள்வது? என்று ஆண்டவரை பார்த்துக் கேட்டான் அப்பொழுது ஆண்டவர் ஒரு சிநேகிதனோடு பேசுவது போல மோசேயுடனே முகமுகமாய்ப் பேசினார். " என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன. உன்னை பெயர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன். இதோ என்னன்டையில் ஒரு இடம் உண்டு நீ அங்கு கண்மலையில் நில்லு என் மகிமை கடந்து போகும்போது நான் உன்னை அந்தக் கண்மலையின் வெடிப்பிலே வைத்து என் கரத்தினால் மூடுவேன் என்று சொல்லி தேவன் தம்முடைய மகிமையினால் மோசேயை நிறைத்தார். அப்பொழுது மோசே ஆண்டவரை நோக்கி உம்முடைய சமூகம் என்னோடேக்கூட செல்லாமல் போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்" (யாத்-33:11-23) என்றான்.

இப்படி மோசே ஆண்டவருடைய பிரசன்னம் தன்னை வழிநடத்துவதை உறுதி செய்து கொண்டான். ஆண்டவருடைய சமூகம் தன்னோடு வராமல் எந்தவொரு செயலையும் தாமாக செய்வதற்கு முற்படவில்லை. அதனால்தான் தேவனுடைய சமூகம் எப்பொழுதும் அவனைத் தாங்கியது. ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ வைத்தது.

பிரியமானவர்களே, நாமும் மோசேயைக் போல நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்களை தேவ பிரசன்னத்திலே தரித்திருந்து செயல்படுத்துவோம் எல்லாக் காரியங்களிலும் ஜெயத்தை சுதந்தரித்துக்கொள்வோம். அல்லேலூயா.

## 2.தாவீதைப் போல..............

ஒரு முறை பெலிஸ்தர் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலருக்கு விரோதமாக பாளயமிறங்கினார்கள். இந்த ஆபத்தான சூழ்நிலையில் தாவீத ஒரு காரியம் செய்தான். கர்த்தருடைய சமூகத்திற்கு ஓடினான். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி கர்த்தரிடத்தில் விசாரித்தான். அப்பொழுது கர்த்தர் "நீ நேராய் போகாமல் அவர்களுக்கு பின்னாலே சுற்றி முசுக்கட்டை செடிகளுக்கு எதிரே இருந்து அவர்கள் மேல் பாய்ந்து முசுக்கட்டை செடிகளின்

நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது சீக்கிரமாய் எழும்பி போ அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்க கர்த்தர் உனக்கு முன்பாக புறப்பட்டு இருப்பார் என்றார். கர்த்தர் தாவீதுக்கு கட்டளையிட்ட பிரகாரம் அவன் செய்து பெலிஸ்தரை கேபா துவக்கி கேசேர் எல்லை மட்டும் முறியடித்தான். (2-சாமு-5:22-25)

பிரியமானவர்களே, ஆபத்தான சூழ்நிலைகளின் வழியாய் நீங்கள் கடந்து போக வேண்டி வரலாம். கொடிதான நோய் உங்களை வாட்டி வதைக்கலாம். மரணத் தருவாயின் சூழ்நிலையில் நீங்கள் கலங்கித் தவிக்கலாம் கொடிய விரோதிகளின் சூழ்ச்சிகள் உங்களை அச்சுறுத்தலாம் மனங்கலங்காதிருங்கள். தேவனிடத்தில் ஆலோசனையைக் கேளுங்கள். அடையாளங்கள் மூலம் ஆண்டவர் பேசுவார். முசுக்கட்டை செடிகளின் நுனிகளில் கடந்து செல்லும் தேவ பிரசன்னம் உங்கள் சூழ்நிலையை தலைகீழாக மாற்றிப் போடும் ஆமென். உங்கள் வேதனைகள் எல்லாம் சந்தோஷத்தின் அனுபவங்களாக மாறும். உங்களுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணுவார். அல்லேலூயா.

## பவுல் அப்போதஸ்தலைப் போல......

கிறிஸ்தவர்களை உபத்திரவப் படுத்திக்கொண்டிருந்த சவுல் என்பவன் கிறிஸ்தவர்களைக் கொலை செய்வதற்கு அதிகாரத்தைப் பெற்று தமஸ்குவின் வீதியில் சென்றுக் கொண்டிருந்தபொழுது கர்த்தர் இடைமறித்தார். சடிதிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். கண் பார்வையை இழந்தான். அப்பொழுது ஆண்டவர் பேசினார். "சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய். நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம்" என்றார். அப்பொழுது சவுல் மனந்திரும்பினான். ஐயோ, கிறிஸ்துவே உண்மையான தெய்வம் என்பதை அறியாமல் தவறு செய்து விட்டோமே என்று மனம் வருந்தினான்.

பிரதான ஆசாரியர்கள் சொன்ன தவறான ஆலோசனைகளை கேட்டதினால் பெரிய பாவம் செய்யவிருந்ததை கர்த்தர் தடுத்து தன்னை காப்பாற்றின தயவை நினைத்துப் பார்த்தான். எந்த இயேசுவை துன்பப்படுத்திக் கொண்டிருந்தானோ, அதே இயேசுவிடம் ஆலோசனைக் கேட்டான். "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று. அப்பொழுது கர்த்தர் அனனியா என்ற தீர்க்கதரிசியை அனுப்பி அவன் கண்களை குணப்படுத்தி சவுல் என்ற அவன் பெயரை பவுல் என்று மாற்றினார். பவுலைப் பார்த்து "நீ போ புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும்

என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரம். நீ எவ்வளவாய் பாடுபடவேண்டும்' என்பதை நான் உனக்கு காண்பிப்பேன்" என்றார். தேவ ஆலோசனையைப் பெற்றுக்கொண்ட பவுல் அதன் பிறகு தன் வாழ்க்கையின் ஒவ்வொருக்கட்டத்திலும் ஆண்டவருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தான். ஆசியா மற்றும் ஐரோப்பாக் கண்டங்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்த பெரிய அப்போஸ்தலனாக மாறினான். (அப்-9:1-20) அல்லேலூயா.

பிரியமானவர்களே, முக்கியமான தீர்மானங்களை நம் வாழ்க்கையில் எடுக்கின்றபொழுது தவறுகள் நேரிடாதவண்ணம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றால் கர்த்தரிடமிருந்து மாத்திரமே ஆலேசனைகளைப் பெற வேண்டும் அப்பொழுது கர்த்தர் நம்மை எலியேசரை நேர்வழியாய் நடத்தி ஈசாக்குக்கு ரெபெக்காளைக் கொடுத்தது போல நம்மையும் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவி செய்வார்.

சவுல் என்ற அரசன் ஒரு குறி சொல்லும் பெண்ணிடத்தில் ஆலோசனைக் கேட்க சென்றதினாலே கில்போவா மலையில் வெட்டுண்டு செத்தான். தாவீதின் மகன் அப்சலோம் அகிதோப்பேல் என்ற கெட்ட மனிதனிடம் ஆலோசனைக் கேட்டதினாலே மதிகெட்ட காரியத்தை செய்து பின்னாளில் அழிந்தே போனான். யூதாஸ் காரியோத் பிரதான ஆசாரியரின் ஆலோசனையின்படி முப்பது வெள்ளிக் காசுக்காக ஜீவாதிபதியாகிய இயேசுவையே காட்டிக்கொடுத்தான்.

ஆகவே மனிதர்களிடம் ஒருநாளும் ஆலோசனைகளைக் கேட்க போகக்கூடாது. மோசேயைப் போல, தாவீதைப் போல, பவுல் அப்போஸ்தனைப் போல எப்போதும் நம் தேவாதி தேவனிடத்தில் மட்டுமே ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். அப்பொழுது நம் வாழ்க்கையிலே தேவ சித்தத்தின்படி ஆசீர்வாதமான தீர்மானங்களை எடுக்க முடியும்.

கர்த்தர் தாமே நம் சபை மக்கள் ஒவ்வொருவரோடும் இந்த ஜீன் மாதம் முழுவதும் கூட இருந்து நல்ல தீர்மானங்களை எடுக்க உதவி செய்வாராக. கர்த்தரின் கிருபைக்கு உங்கள் ஒவ்வொருவரையும் ஒப்பு கொடுக்கிறேன்.

கர்த்தருடைய பணியில்,

அன்பு சகோதரன்,

S.ஸ்டாலின்

# தேவ செய்தி

கர்த்தர் சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கிய போது கர்த்தர் மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார் மோசே ஏறி போனான். யாத் 19:20)

கர்த்தருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள் எகிப்த்தில் அடிமைபட்டிருந்த நேரம் அப்போதைய எகிபத்திய மனுஷரால் இஸ்ரவேலனாகிய ஒருவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியை பொருத்துகொள்ளமாட்டாமல் அவனுக்கு நீதியை சரிகட்டினார் மோசே. அதினிமித்தம் பல போராட்டங்களை அவர் சந்திக்க நேர்ந்தது. எகிப்த்திய மன்னன் பாரோன் மோசேயை கொலை செய்யும்படி வகை தேடினான். (யாத் 2:15)

எகிப்த்திய சாம்ராஜ்யமே அவனை பகைத்தது. எகிப்து என்பது சாதாரன தேசமல்ல, இன்றைக்கு அமெரிக்க தேசம் எப்படி வல்லரசாக இருக்கிறதோ அப்படி அன்றைய எகிப்து இருந்தது. அதின் மேலான அதிகாரத்தில் இருந்தவர்கள் அவனை பகைத்தார்கள். அவர்களை எதிர்த்து அவனால் ஒன்றும் செய்ய முடியாது என்கிற சூழ்நிலை.

எகிப்தில் இருந்து தப்பித்து மீதியான் தேசத்துக்கு சென்றான். அங்கு அவன் சீனாய் மலையின் அடிவாரத்தில் ஆடு மேய்த்து கொண்டிருந்தார். சீனாய் என்பதற்கு பகை என்று அர்த்தமாகும்.எகிப்தின் பகைமையினால் மோசே பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பகை என்கிற சீனாய் மலையின் அடிவாரத்தில் தன்னுடைய நிலையை நினைத்து வேதனை பட்ட தருணங்கள் அநேகம் உண்டு.

ஆண்டவரே எகிப்த்தின் பகைமையை என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை (சீனாய் மலையத்தனைய் பிரமாண்டமான இந்த பகை ( சீனாய்) என்னை காலில் போட்டு மிதிக்கிறது. இந்த போராட்டத்தை என்னால் சகித்து கொள்ள முடியவில்லை. மனிதர்களினால் ஏற்பட்டுள்ள சிறுமையை என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை. இந்த பிரச்சனை என்னை வெகுவாய் அழுத்தி கொண்டிருக்கிறது. நான் அனுபவிக்கிற பாடுகளை கண்ணோக்கி பாரும், தயவு செய்து இந்த போராட்டத்தில் இருந்து என்னை விடுவித்தருளும் என்று மோசே விண்ணப்பித்த தருணம் எத்தனை எத்தனை?

என்ன சம்பவித்தது தெரியுமா? நாட்கள் வந்தபோது கர்த்தர் மோசேயின் பட்சமாய் செயல்பட ஆரம்பித்தார். மோசையை பகைத்தவர்கள் மத்தியில் கர்த்தர் கிரியைகளை துவக்கினார். மோசேக்காக நீதியை சரிகட்ட ஆரம்பித்தார்.

மோசேயின் கரத்தினால் பலத்த செய்கைகள் செய்யபட்டது. ஜனங்களை மீட்டுக் கொண்டு பார்வோனையும் அவன் சேனைகள் முழுவதையும் வாரி சுருட்டி செங்கடலில் போட்டுவிட்டு. சீனாய் மலையின் அடிவாரத்தை அடைந்தார் மோசே. இந்த சீனாய் மலையின் கொடுமுடியில் கர்த்தர் இறங்கினார். கர்த்தர் மோசேயை சீனாய் மலையின் கொடிமுடியின் அழைத்தார். மோசையை பார்த்து கர்த்தர் சொல்லாமல் சொல்லிவிட்டார். மோசே எகிப்தின் இந்த சீனாய்(பகை) தானே உன்னை அழுத்தி கொண்டிருந்தது. அதன் மேல் ஏறிவா ஏறிவா என்ற அழைக்க ஆரம்பித்தார். மோசேய் வெற்றி வீரனாய் மேலே ஏற ஆரம்பித்தார். எந்த பகை (சீனாய்) மோசேயை அழுத்தி கொண்டிருந்ததோ. அந்த பகை (சீனாய்) மோசேயின் காலுக்கு கீழே வர ஆரம்பித்தது. கொஞ்ச கொஞ்சமாய் பகை என்கிற முழு சீனாயும் மோசேயின் காலில் கீழ் வந்தது. ஒரு காலத்தில் அவன் தலைக்கு மேலாக பிரமாண்டமாய் நின்ற அந்த சீனாய் இப்பொழுது அவன் காலின் கீழே.

ஆம் எனக்கன்பான தேவ பிள்ளைகளே மனிதர்களின் பகைமையினால் ஏற்படுகிற பாடுகள் உங்களை அழித்து கொணடிருக்கிறதோ? உங்கள் வாழ்வில் நீங்கள் சந்திக்கிற போராட்டங்கள் உங்களை வேதனை படுத்துகிறதோ? கலங்க வேண்டாம் உங்கள் பணி இடத்திலும் சொந்த வாழ்விலும், அனுபவிக்கிற எல்லா பாடுகளையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். உங்கள் கண்ணீர் ஒன்று கூட தரையில் விழவில்லை அவைகளைல்லாம் அவர் துருத்தியில் விழுந்திருக்கிறது, எல்லாவற்றிக்கும் பதில் சொல்லும் நாட்கள் வரும்.

உங்கள் பகை என்றும் சீனாயின் மத்தியில் கர்த்தர் இறங்குவார். உங்களை பகைக்கிறவர்கள் எவ்வளவு மேலான அதிகாரத்தில் இருந்தாலும். உங்களோடு இருக்கிறவர் அவர்களுக்கு முன்பாக வெற்றி சிறக்கபண்ணுவார். இன்று உங்கள தலைக்கு மேலாய் உங்களை அழுத்தி கொண்டிருக்கிற எல்லா பிரச்சனைகளையும், எல்லா போராட்டங்களையும், கர்த்தர் உங்கள் காலின் கீழே கொண்டு வருவார். சமஸ்த இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக கர்த்தர் உங்கள் கொடிமுடிகளை காண பண்ணுவார். நீங்கள் கொடி முடிகளை காண்பீர்கள், அல்லேலூயா!

ஆமென்

கர்த்தரின் பணியில்

போதகர். ஜப்பெலின் ஜோசப் ( பரமக்குடி ,தமிழ்நாடு, இந்தியா)

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)

# கர்த்தருக்கு நேரம் கொடுங்கள்

கெச்மனே தோட்டத்தில் கர்த்தர் கேட்ட ஒரு கேள்வி உங்கள் உள்ளத்தில் ஜெப ஆவி எழுப்பட்டும் அவர் கேட்டார் "ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்க கூடாதா?

கிறிஸ்துவின் வார்த்தை கவலையோடும், பாரத்தோடும், ஏக்கத்தோடும், இந்த வசனத்தில் வெளியாகிறது! ஜெபிக்கிறதற்கு ஒரு மணி நேரத்தையாவது ஒதுக்க கூடாதா? என்பதே அவருடைய கேள்வி.

ஒரு நாளைக்கு 24 மணி நேரம் உண்டு உண்பதற்கும் உறங்குவதற்கும், எவ்வளவோ நேரங்களை செலவிடுகிறீகள், வேலை செய்யும் இடத்தில் நேரத்தில் செலவிடுகிறீகள்.

ஜெபிப்பதற்கு உங்களை சிருஷ்டித்த வேனோடு மனம் திறந்து பேசுவதற்கு உங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்த இரட்சகரோடு சம்பாஷிப்பதற்கு நீங்கள் செலவிட வீரும்பும் நேரம் என்ன ?

நேரத்தில் தசமபாகம் செலுத்த வேண்டுமானால். 2 மணி நேரம் 24 நிமிடங்கள் நாம் செலுத்த வேண்டும். கர்த்தர் கேட்கிறார், ஒரு மணி நேரமாவது நீங்கள் விழித்திருந்து ஜெபிக்க கூடாதா?

கிறிஸ்து சிலுவையில் 6 மணி நேரம் தொங்கினார். அதில் அவர் பேசிய வார்த்தைகளில் பெரும் பகுதி ஜெப வார்த்தைகளே ! இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் பொழுது கூட "பிதாவே அவர்களுக்கு மன்னியும்" தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே. என்று நமக்காக மன்றாடி ஜெபித்தாரே. நாமும் அவரோடு இணைந்து ஜெபிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி கொண்டோமா? ஒரு மணி நேரமாவது ஜெபிக்கிறோமா?

மார்டின் லூதர் தன்னுடைய தலை சிறந்த 3 மணி நேரத்தை ஜெபத்தில் செலவழித்தார். எப்பொழுத எனக்கு வேலையிருக்கிறதோ, அப்பொழுது நான் இன்னும் அதிகநேரம் ஜெபிப்பேன் என்றார் அவர்.

## ஜெபபாரத்தை நரம்புகளில் ஏற்றிக்கொள்ளுங்கள்.

திடீரென்று ஜெபித்தால் பல வேளைகளில், ஊக்கமாக ஜெபிக்க முடியாது, ஏனோ தானோ என்று ஜெபிக்க சென்றால், சிந்தனைகள் சிதறும், மனம் ஒரு நிலையில் இருக்காது, கொட்டாவியும் தூக்கமும்தான் வரும்.

நீங்கள் ஜெபிக்க செல்வதற்கும் முன்னால் ஜெப பாரங்களை உங்கள் நரம்புகளில் ஏற்றுக் கொள்ளுங்கள். ஜெப விண்ணப்பங்களை தயார் செய்து கொள்ளுங்கள், ஜெப அறைக்குள் நுழையும் முன், ஒரு ஊக்கத்தோடும், விடாபிடியோடும் செல்லுங்கள், அப்பொழுதான் உங்கள் இருதயத்தை ஊற்றி ஜெபிக்க முடியும் . ஒரு மல்யுத்த சண்டையில் கலந்து கொள்ளும் முன் அந்த வீரன், தன் எதிராளியின் மேல் வெறுப்பு உணர்சிசகளை தன் உள்ளத்தில் ஏற்றி கொள்வான், மகா கசப்பான வெறுப்பான எண்ணங்களை தன் இருதயத்தில் கொண்டு வருவான். பற்களை கடிப்பான் முகத்தை பயங்கர கோபமாக்குவான், அதன் பின்புதான், குத்து சண்டையில் மழு பெலத்தோடு இறங்குவான், அப்பொழுதுதான் அவனால் கோபவெறியோடு சண்டையிட முடியும்.

அது போலவே, ஜெப களத்தில் இறங்கி உங்கள் இருதயத்தை ஊற்றும் முன்னால், உங்களை அந்த ஜெப நேரத்திற்கு தயார் படுத்தி கொள்ளுங்கள். உதாரணமாக, குழந்யையில்லாத அன்னாள் அன்று ஜெபிக்க சென்றதை நினைத்து கொள்ளுங்கள். அவள் ஆலயத்தை நோக்கி செல்லும் முன்னால். அவள் எவ்வளவு பாரத்தோடு சென்றிருப்பாள் என்று சிந்தித்து பாருங்கள்.

ஐயோ எனக்கு குழந்தையில்லையே, என் வாழ்க்கை வெறுமையாயிருக்கிறதே, என்னை அம்மா என்றழைத்து மழலை மொழி பேச செல்வம் இல்லையே, என் சக்களத்தி என்னை மலடு என்றும் வாழாவெட்டி என்றும் சாபத்தின் உருவம் என்றும் பரியாசம் செய்கிறாளே?

நான் இன்றைக்கு ஆண்டவர் சமூகத்தில் என் கவலையை இறக்கி வைக்க போகிறேன், அவர் எனக்கு பதில் கொடுக்காமல் நான் விட போவதில்லை, நான் எவ்வளவு காலம் அவமான சின்னமாய் அலங்கோலபடுவது, இன்றைக்கு கர்த்தரிடத்தில் நான் போராடி மேற்கொள்ள போகிறேன், என் கணவனின் ஆறுதல் மொழியை பார்க்கிலும் கர்த்தருடைய அற்புதத்தையே நாடுவேன்.

அப்படித்தான் அன்னாள் தன் உள்ளத்தில் ஜெப வெறியை ஏற்றி இருக்க வேண்டும் யுத்தத்திற்கு செல்லு முன் , வீரர்கள் வீரத்தை உள்ளத்தில் ஏற்றுவதைப் போல, ஓட்டபந்தயத்தில் கலந்து கொள்ளும் முன், போதை பொருளை குதிரையின் நரம்புகளில் ஏற்றுவதை போல அவள் தன் உள்ளத்தில் ஜெப ஆவியினால் நிரப்பி இருக்க வேண்டும் , அந்த வைராக்கித்தோடுதான், அவள் கால்களை கர்த்தருடைய ஆலயத்தை நோக்கி தீவிரபட்டிருக்கும். அங்கே அவள் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். மடை திறந்த வெள்ளம் எப்படி பீறிட்டு வெளி வருமோ அது போல அவள் உள்த்தில் இருந்து ஜெபம் பீறிட்டு வெளி வந்தது, அவள் போய் மனங்கசந்து அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள்(1 சாமு1:15)

(நன்றி (ஜெபிப்போமா) சகோ. சாம்ஜெபத்துரை)

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வி. ஹேனா ஷாரோன்
செல்வி. பிரவீனா லாசர்
செல்வி.ஜெயபாரதி பாண்டியன்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ
செல்வன். வெங்கடேஷ் ராஜன்
செல்வன். ஃபீஸ்டஸ் ஃபெலிக்ஸ்
செல்வன். தம்பு குமார் ஜெயசீலன்
செல்வன். ஜுயன் லின்சன் ஜெபசிங்
செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
செல்வன். ராயன் சதீஷ்குமார்
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
செல்வன். ஸெர்வின் சிவகுமார்
செல்வன். ஜோஷ்வா ஜாண்சன்
செல்வன். ஆகாஸ் கிதியோன்
செல்வன். ரனால்டோ ஜோசப்
செல்வன். நிபதின் ஹரீஷ்
செல்வன். ஜாண் ஜெரமியா மில்லர்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்

சகோதரி. வளர்மதி அல்போன்ஸ்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
சகோதரி. ஸோபியா மேஷாக்
சகோதரி. கீதா ஜெயகுமார்
சகோதரி. ஷீபா பிரசாத்
சகோதரி.இசைவாணி வில்கின்ஸ்சன்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்
சகோ. ஜாண் கெஸ்டன்
சகோ. ஜெசீலன் .C
சகோ. ஸ்டீபன். R
சகோ. ஜஸ்டிஸ் விஜல் குமார்
சகோ. ஜெஸ்டின்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ.பிபின் ரிச்சர்ட்
சகோ. தேவதாஸ்
சகோ. பால் புருஷோத்தமன்
சகோ. கிரன் குமார்
சகோ.ஜோஸ்வா தோனி
சகோ.அந்தோனி பாபு
சகோ. பக்தராஜ்
சகோ. ஜஸ்டிஸ். P
சகோ. அந்தோனி சாமி
சகோ. பால் பாண்டியராஜ்
சகோ. கிறிஸ்டோபர் .M

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. லாவண்யா வினோத்குமார்
திருமதி & திரு. சஜின் ராஜன்
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. சுப்ரமணி கோவிந்தராஜுலு
திருமதி & திரு. சுஜின் ஹேகில்

திருமதி & திரு. ஆ. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட்ஜெயகுமார்
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. மகேஷ் ராஜ்
திருமதி ரூ திரு. ஸ்டீபன். R

# 2018 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/06/2018 | சகோ. சுகுமார் | சகோ.அற்புதராஜ் |
| 10/06/2018 | சகோ. பால் பாண்டியன் | சகோ.கிறிஸ்டோபர் |
| 17/06/2018 | சகோ. ஐசக் துரை | சகோ. அசோக்குமார் |
| 24/06/2018 | சகோ. ஜெபராஜ் | சகோ. பிரசாத் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/06/2018 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. ஸ்டாலின் |
| 08/06/2018 | சகோ. எபிநேசர் | சகோ. ஜெயசேகர் |
| 15/06/2018 | சகோ. வில்ஸன் | சகோ. பிரேம்குமார் |
| 22/06/2018 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 29/06/2018 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ. ஆசீர்வாதம் |

**1/06/2018 அன்று புதிய செயற்குழு பொறுப்பேற்பு**

**7/06 /2018 அன்று சங்கிலி தொடர் ஜெபம்**

**14/06 /2018 அன்று முழு இரவு ஜெபம்**
(இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**29/06/2018** மாதாந்திர வாலிப ஐக்கிய கூடுகை
நேரம் ( மாலை 6:30 முதல் 8:30 வரை)
இடம் ஜெபவீடு பாஹில் வேத வினா பகுதி I கொரிந்தியர்

**16/06/2018** மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
நேரம் ,6:30இடம்,பாஹில் ஜெபவீடு, வேத வினா பகுதி நீதிமொழிகள்

# 2018 ஜுன் மாதத்திற்கான வேத வினா!

கீழ் கண்ட கேள்விகளுக்கு தக்க பதிலை வேத ஆதாரத்துடன் ஏழுதவும்

1.ஒரு மனிதனின் பெயன் ஒரு ஊருக்கும், பட்டிணத்திற்கும், ஒரு பா்வதத்திற்கும், ஒரு விக்கிரகத்திற்கும் வேதத்தில் வருவது. ( எண் 32- உபா 34, 32, -எஸ்ரா-2,10, -நெகேமியா 7, - ஏசா 46)

2.ஆபிரகாமின் பேரன் பெயரும், கடாக்களுக்கு பெயர் போன அரேபியாவின் ஒரு பகுதியின் பெயரும் ஒன்றே ( ஆதி 25 - 1 நாளா 1 - ஏசா 60)

3.ஐந்து எழுத்து ஊரின் பெயர்,இஸ்ரவேலின் மகிமை எனப்பட்ட பட்டணத்தின் பெயரும், யோ-சுவா ஜெயித்த ஒரு ராஜா ஆண்ட பட்டணத்தின் பெயரும், ஒரு குகையின் பெயரும் ஒன்றே, (மீகா 1 -ஆதி 38 - 1 சாமு 22 - 2 சாமு 23 - 1 நாளா 11 - யோசு 15)

4.ஒரு யூதா மரத்தின் பெயரும், ஒரு பட்டணத்தின் பெயரும், பென்யமீன் கோத்திரத்தில் ஒருவ-னின் பெயரும், ஆபிரகாம் ஆகாரின் பேரன் பெயரும் ஒன்றே. (ஆதி 25 - 1 நாளா 8 - எஸ்றா 6 - எஸ்தர் 3 - யோசு 15)

5.ஒரு சீமையை குறிக்கும் பெயரும், எகிப்தின் ஜனன தேசத்தின் பெயரும் ஒன்றே. (எரே 44 - எசேக் 29)

6.ஒரு அப்போஸ்தலனின் தகப்பன் பெயரும், ஒரு தீர்க்கதரிசியின் மகன் பெயரும் ஒன்றே( மத் 16 - யோ 1 - 2 ராஜா 14)

7.ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரே பெயர், பெண் 12 பேருக்கு தாயானவள், ஆண், தனக்கு இருந்த குமாரர், குமாரத்திகளையும் தன்னோடு சேர்ந்து சாக காரணமானான்(ஆதி 25 - 1 நாளா2 - யோசு 7)

8.ஒரு தீர்க்கதரிசியின் பெயரும், ஆபிரகாமின் பேரன் பெயரும், பாபிலோனிய தேவதையின் பெயரும் ஒன்றே( 1 சாமு 22 - 2 சாமு 24 - 1 நாளா 29 - 1 நாளா 2 - ஏசா 65)

9.ஒரு பட்டணத்தின் பெயரும், ஒரு ஆற்றின் பெரும் ஒரு பள்ளத்தாக்கின் பெயரும் ஒன்றே ( யோசு 21 - நியா 4,5 - 1 ராஜா 18 - சங் 83)

10.ஒரு தீவுக்கும், ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கபட்டவர்களின் தகப்பன் ஒருவன் பெயரும், மீன் வாசலை பழுதுபார்த்து கட்டியவர்களில் முக்கியமானவர்களின் தகப்பன் பெயரும் ஒன்றே( அப் 21 - எஸ்றா 2 - நெகே 7,3)

11.ஒரு பட்டணத்திற்கும், ஆலயத்தின் காணிக்கை கணக்கிட வைக்கப்பட்ட உண்மையுள்ளவர்களில் ஒருவன் பெயரும், தேவனுடைய வனம் என்றழைக்கபட்ட ஒரு தோட்டத்திற்கும் ஒரே பெயர்.( எசே 27, 31 - 2 நாளா 31)

12.ஒரு மலையின் பெயரும், ஓரிய சந்நதியில் வந்தவனின் பெயரும், தேவனுடைய பிரமாணங்கள் எழுதப்பட்ட கற்கள் இருந்த பா்வதத்திற்கும் ஒரே பெயர். (உபா 11,27-ஆதி 36 )

13.A. வேதத்தில் உள்ள ஒரு ஆற்றின் பெயர் ( உபா 2 )

B. ரூபன் கோத்தரத்தாருக்கு சேர்ந்தது இதுவும் இதன் வெளி நிலங்களும் ( 1 நாளா 6)

C. கா்த்தருடைய ஊழியக்காரனின் மறுபெயர். ஒரு இஸ்ரவேல் ராஜாவுக்கு உண்டு ( எண் 13 - 2 ராஜா 17)

விடைகளை வருகின்ற 20-06-2018 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீகள்.. அல்லது விடைகளை (Whats app மூலமும் அனுப்பலாம் # 66015503)

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## 2018 மே மாத வேத வினாவுக்கு பதில்

***கீழிருந்த மேல்***

**தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனின் தகப்பன் பெயர்.(சீசா)( I நாளா** 11:42**)**

**மேலிருந்து கீழ்**

**அப்சலோமின் பேத்தியின் பெயர் (சீசா)(2 நாளா** 11:20**)**

***வலமிருந்து இடம்***

**கொர்சோனியனான சிமேனியின் இரண்டாவது குமாரன் பெயர் (சீனா)(I நாளா** 23:10,11**)**

***இடமிருந்து வலம்***

**ஒரு துரவின் பெயர் –(சீரா) (**2 **சாமு** 3:26**)**

O to C. **சவுலின் வீட்டு வேலைகாரன் பெயர்.(சீபா)(2 சாமு** 9:2,9**)**

O to A. **கர்த்தரின் புத்திரரில் ஒருவனுக்கு இப் பெயர் உண்டு (சீகா.)( I நாளா** 5:13**)**

O to B. **மக்கெதோனியாவில் தீமோத்தேயுடன் இருந்தவர்.(சீலா) (அப்** 18:5**)**

O to D. **ஒரு வனாந்தரத்திற்கும் ஒரு எகிப்திய பட்டணத்திற்கும் இப் பெயர் உண்டு(சீன் )(எசே** 30:15,16**– யாத்** 16:1**)**

C to D. **ஓக் ராஜாவின் தேசத்திற்கு இப்பெயர் உண்டு (பாசான் )(எண்** 21:33**)**

A to B **எப்பிராயிமருடைய பட்டணங்களில் ஒன்று எருசலேமைவிட பெரியது கானானை பங்கிட்ட போது யூதாவுக்கு கிடைத்தது.(காசா )(யோசு** 14:47**,நியா**6:4**)**

A to C. **எப்பிராயீம், மனாசே, எல்லயைில் உள்ள ஒரு நதியின் பெயர். (கானா)(யோசு** 16:8,17:9**)**


C to A **சாலமோனின் இரண்டு மாணியக்காரரில் ஒருவரின் பெயர் (பானா)(I ராஜா** 4:7.12**)**

| | | |
|---|---|---|
| **A** fh | rh | **B** yh |
| dh | **O** rP | uh |
| **C** gh | rh | **D** d; |

## 2018 மே மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. அ.ஜோன் அசோக்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட்ஜெயகுமார்

Sis. ஷீபா அருண் இம்மானுவேல்
Sis. நகோமி ஜான்ஸன்



# நெகேமியா

## ஒழுங்கு படுத்துவோம் வாருங்கள்.

நெகேமியா 7 ஆம் அதிரரத்தில் வரும் போது மகிழ்ச்சியான ஒரு குறிப்பு பார்க்கிறோம். அது எருசலேமியன் அலங்கம் கட்டி முடிந்தது. என்பதாகும். (7:1)கர்த்தர் துவங்கும் காரியம் ஜெயமாய் முடிந்தது, மனிதன் துவங்கும் காரியம் அநேக சமயங்களில் தோல்வியில் முடியும்.

காரிய சித்தியோ கர்த்தரால் வரும் ( நீதி 16:33)
ஜெயமோ கர்த்தரால் வரும் ( நீதி 21:31)

எனவே தேவனுக்காக செயல்படும் ஒவ்வொரு வருக்கும் காரிய சித்தி உண்டு தேவ ஊழியம் செய்வோருக்கு நிச்சயம் ஜெயம் உண்டு ஊழியக்காரனுக்கு எதிராய் உருவாக்கபடும் எந்தஆயுதமும் வாக்காமலே போகும், ஊழியக்காரனுக்கு எதிராய் பேசுகிற எந்த நாவும் அடைக்கபடும்.(ஏசாயா 54:14)

அலங்கம் கட்டி முடிந்தது, கதவு போடப்பட்டு வாசல் காவலாளரையும் பாடகரையும், லேவியரையும் ஏற்படுத்தினேன் (7:1) என்றுதான் இந்த அதிகாரம் துவங்குகிறது. ஏழு என்றாலே பூரணம் என்றுதானே பொருள், நெகேமியா 7 ஆம் அதிகாரத்தில் வரும்போது அலங்கம் பூரணமாய் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

ஆனால் இனிதான மிக முக்கிய பொறுப்புகள் இருக்கிறது. இதுவரை சுநு உழளெவசரஉவழைெ ழக வாந றயடட துநசரளயடநஅ அலங்கத்தை மறுபடியும் கட்டுதல் என்று கூறலாம் ஆனால. இனி வரக்கூடிய 7 முதல் 13 வரை உள்ள அதிகாரங்களும் சந ைளெவரஉவழைெ ழக வாந◌ிநழிடந ழக ளைசயநட

எனவே இனி வரக்கு4ய 7 அதிகாரங்களும் இஸ்ரவேல் ஜனத்திற்கு போதனைகளை கொடுத்து ஒழுங்குபடுத்துவதை குறிக்கிறது. ஒரு தேவ ஊழியம் கட்டப்படுவது பெரிய காரியம். அது பொல் கட்டப்பட்ட ஊழியம் தொடர்ந்து நிலை நிற்பதற்கு ஸ்தாபனம் பண்படுதலும் மிக மிக அவசியம். ஒழுங்குபடுத்துதலும் மிக முக்கியம்.

இந்த 7ஆம் அதிகாரத்தில் ஏழவிதமான காரியங்களை நெகேமியா செய்து எருசமேின் ஜனங்களை ஒழுங்கு படுத்தினார்.

## 1. உண்மையுள்ள நிர்வாகஸ்த்தர்கள்.(7:1-2)

எருசலேமின் அலங்கம் கட்டபட்ட பின்பு அதை நிர்வாகம் செய்ய பழைய அதிபதிகள் நியமிக்கபட்டார்கள்/ பழையன கழிதலும் புதியன புகதலும் ஊழியத்திலும் உண்டு. உண்மையில்லாதவர்கள் புறம்பாக்கி விட்டு உண்மையுள்ளவர்களை உட்புகுத்துவது அவசியம். அப்பொழுதான் எருசலேமில் கர்த்தர் வாசம் செய்வார் கட்டபட்ட அலங்கம் பாதுகாக்கபடும்.
நான் என் சகோதரனாகிய ஆனானியையும். அநேகலை பார்க்கிலும் உண்மையுள்ளவனும் தேவனுக் குபய்நதவனுமாய் இருந்த அரண்மனை தலைவனாகிய அனனியாவையும் எருசலேமின் காவல் விசாரணக்கு ஏற்படுத்தினேன்.(7:2) என்று எழுதப்பட்டுள்ளது.

எருசலேமின் விசாரிப்பை கவனிக்க உண்மையுள்ள அதிபதிகள் தேவை. அதே போல் இன்று சபையை நிர்வாகம் செய்ய உண்மையுள்ள மூப்பர்கள், உண்மையுள்ள ஆலோசனைகாரர்கள். உண்மையுள்ள ஜெபகுழு தலைவர்கள், வேண்டும். உண்மையுள்ள தலைவர்கள் மூலமே ஊழியர்கள் ஸ்திரப்பட முடியும்.
மோசேயின் நாட்களில் நடந்த ஊழியத்திலும் உண்மையுள்ளவர்களே மோசேக்கு உதவிகாரர்களாக ஏற்படுத்தப்பட்டனர். (யாத் 18:21)

புதிய ஏற்பாட்டிலும் பவுலின் ஊழியத்திலும் உண்மையுள்ளவர்களே மோசேக்கு ஊழியகாரர்களாக ஏற்படுத்தபட்டனர். (1 தீமோ 3:10)
இன்று நடக்கும் கடைசிகால ஊழியங்களுக்கு உண்மையுள்ளவர்களே கர்த்தரின் சபைக்கு தேவை.(மத் 25:23)
கர்த்தரின் வருகையில் ஆட்டுகுட்டியானவரோடு காணப்படுபவர்கள்

உண்மையுள்ளவர்களே (வெளி 17:14)
சபையில் உண்மையாய் இருப்போம் (எபி 3:5)
போதனையில் உண்மையாய் இருப்போம (தீமோ 2:2)
பணத்தில் உண்மையாய் இருப்போம் (கொரி 4:2)
ஆவியில் உண்மையாய் இருப்போம் (நீதி 11:13)
சிநேகரிடத்தில் உண்மையாய் இருப்போம்(ஆதி 47:29)

தேவ ஊழியம் ஸ்திரப்பட வேண்டுமானால் உண்மையுள்ள தலைவர்கள் நம் சபையில் காணப்பட வேண்டும். நெகேமியா செய்தது போல உண்மையற்றவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு உண்மையுள்ளவர்களை நியமிக்க வேண்டும்.

( தொடரும் )

# மிஷனெரி செய்திகள்

## எளிமையில் இனிமை

### கொலம்பா (521-597)

துறவு வாழ்க்கை, குடும்பங்களை விட்டு இறைவனையே சார்ந்து வாழும் வாழ்வு. உலக ஆசாபாசங்களுக்கு இதில் இடமில்லை. எளிமையும், தனிமையுமே இதன் நன்பர்கள். ஐரோப்பிய நாடுகளில் இத்துறவு வாழ்வை அநேகர் விரும்பி ஏற்றுக்கொண்டிருந்த காலம். சிறு சிறு மடங்கள் ஆங்காங்கே தோன்றிக்கொண்டிருந்தன.

ஆடம்பரமற்ற வாழ்வும், எளிய உணவும், வேத வாசிப்பும், தியானமும் மக்களை மனதைக் கவர்ந்தன. துறவிகளின் பரிசுத்த வாழ்க்கை ஜொலிக்க ஆரம்பித்தது. அயர்லாந்தில் பிறந்த கொலம்பா இவ்வாழ்வால் மிகவும் கவரப்பட்டார். ஆத்ம வளர்ச்சியில் அனுதினமும் வளர அரும் பிரயாசப்பட்டார். எனவே துறவு மடத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். உலகப் பற்றுகள் அவரை விட்டு ஓட்டம் பிடித்தன.

கிபி 550-ல் டர்மாக் என்னுமிடத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தை நிறுவினார். இவருடைய தூய வாழ்க்கையையும், சொற்பொழிவையும் கேட்ட மக்கள் இரவுப் பகலாக அவரைக் காணத் துடித்துக்கொண்டிருந்தனர். பலர் துறவு வாழ்வை மேற்கொண்டு இம்மடத்தில் இணைந்தனர். அந்நாட்டின் அரசன் தீயவழிகளில் சென்றதால் அவனைத் திருத்த முயற்சிகள் மேற்கொண்டனர். அம்முயற்சிகள் பலனளிக்காததால் அந்நாட்டை விட்டு வெளியேறினார். ஐயோனா என்ற தீவில் வந்து சேர்ந்த இவர், அங்கு ஒரு பெரிய கிறிஸ்தவ மடத்தைக் கட்டி அநேகரைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

வேதம் வாசிப்பதையும், ஜெபம் செய்வதையுமே பிரதானமாகக் கொண்ட கொலம்பா தரையில் உறங்கி ஒரு கல்லைத் தனக்கு தலையணையாகப் பயன்படுத்தி, எளிய உணவை உண்டு சிறப்பான வாழ்வை நடத்தியவர். ஏழைக் குடியானவன் முதல் அரசன் வரை அனைவரும் இவர் சொற்படி கேட்டு நடந்ததால் நாட்டில் அமைதியும், இன்பமும் அளவில்லாமல் காணப்பட்டது.

## இழப்பது மேன்மைக்கே

### சவாரா குரியாகோஸ் (1805-1871)

இந்தியாவில் கத்தோலிக்க திருச்சபை வேரூன்றி வளரவும், அதற்குத் தேவையான துறவிகளை இந்தியாவில் உருவாக்கவும் அரும்பாடுபட்டவர்களில்

ஒருவரே சவாரா குரியோகோஸ். இவர் காலத்தில் கேரள திருச்சபை புதுப் பொலிவுடன் வளரத் தொடங்கியது. கேரள மாநிலத்தில் பிறந்த இவர், இளம் வயதிலேயே குருமடத்தில் மாணவராக இணைந்தார். தமது 24 வயதில் குருபட்டம் பெற்ற இவர் மிகுந்த கட்டுப்பாடுடனும், இறைப்பற்றுடனும் திருப்பணிகளை நிறைவேற்றினார். துறவறத்தை விரும்பிய இவர் சந்நியாச மடம் ஒன்றைத் தோற்றுவிக்க ஆவல் கொண்டார்.

கற்பு, ஏழ்மை,கீழ்ப்படிதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார். துறவிகளுக்கு அவர் எழுதிய ஒரு கடிதத்தில் நாம் பட்டினியாலும் அமைதியின்மையினாலும் உலகைவிட்டுத் துறவிகள் இல்லம் புகுந்தவர்கள் அல்ல. பிறரைப் போல் செல்வங்களையும், இன்பங்களையும் நாம் உலகில் அடைந்திருக்கலாம், ஆயினும் உற்றார், பெற்றோர், உலக உடமைகள் அனைத்தையும் துறந்த நாம் ஞான வாழ்வில் நம் கவலையினால் இறை அருளை விட்டுவிட்டால், நம்மைவிட அற்பர்களும், இழிவானவர்களும் வேறு எவரும் இருக்க முடியாது என்றார்.

இவரது கடினமான சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாத சில அர்ப்பணிப்பில்லாத துறவிகள், அச்சபையை விட்டு வெளியேறினர். நேர்மையையும், ஒழுக்கத்தையும் தாம் கடைப்பிடித்ததோடு பிறரையும் அவ்வழியைப் பின்பற்றுமாறு எதிர்பார்த்தார். கேரளத்தின் முதல் அச்சகத்தைத் தோற்றுவித்தார். தமிழ் மொழியைக் கற்று, அதன் மூலம் அநேக மலையாள நூல்களை வெளியிட்டார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். ஆதரவற்றவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் கருணை இல்லங்களை ஏற்படுத்தினார். திருச்சபைகளுக்கு இடையே காணப்பட்ட வேற்றுமைகளைக் களைந்து, ஒற்றுமை ஏற்படக் காரணமான இவர், தம் போதனைகளால் அநேகரைக் கிறிஸ்துவின் அண்டையில் ஈர்த்தார். எனவே போதகச் சம்மட்டி என்றும் இவர் அழைக்கப்பட்டார்.

கிறிஸ்துவின் பணியில்,

S.சுகுமாரன்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

எபேசியர் 1:3

## திருச்சபை ஸ்தாபிப்பதில் பெண்களில் பங்கு என்ன?

பெண்ணாக பிறந்தால் குடும்பத்திலும் சமூகத்திலும் கன்னிய குறைவாக நடத்தப்படலாம். உரிமைகள் கிடைக்காமல் போகாலாம். சுதந்திரம் பரிக்கப்படலாம்,ஆனாலும் தேவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவர்தானே ஆகவே ஊழியத்திலும் பெண்கள் பங்கெடுப்பதில் தேவன் பிரியப்படுகிறார்.

தேவனுடைய வாசஸ்தலம் கட்டும் பணியில் இஸ்ரவேல் பெண்மணிகள் மணபூர்வமாய் காணிக்கைகளை செலுத்தினார்கள். என்று யாத் 35ஆம் அதிகாரம் சொல்லுகிறது. தங்களுக் எகிப்தியர்கள் வழங்கிய தாராளமாக பொன் செம்பு போன்ற விலையுயர்ந்த பொருட்களையும் ஆபரணங்களையும் ஆலய கட்டுமான பணிக்கு அன்பளிப்பாக அளித்தார்கள் என்பதை காண்கிறோம்.

ஆசாரியர்கள் அணியும் ஆடைகளை ஞானமாக பெண்கள் நூற்று தேவ நாமம் மகிமைபட ஏதுவாக இருந்தார்கள் என்று பார்க்கிறோம்.

கிறிஸ்தவ ஊழியத்தில் பெண்களாகிய நாம் நமது சொந்த வீட்டை ஞானத்தோடும் உற்சாகததோடும் கட்டுவோமானால் நிச்சயமாய் பரலோகத்தில் குடும்பமாக தேவனை தரிசிக்கலாம் குணசாலிய ஸ்திரிகளாகிய நாம் மாறினாலே போதும் திருப்பணி பூரணமடைந்துவிடும் இதைதான் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்துவுக்குள்

அன்ப சகோதரி : பிரிசில்லா ஆமோஸ்.

அசீரியாவில் புதை பொருள் ஆராய்சியாளர்கள். அசரீய ராஜாவான சர்கோனின் அரண்மனை இருந்த இடத்தை தோண்டி அரண்மனையின் வாயிலில் ஒரு சொரூபத்தை கண்டுபிடித்ததனர். இது மனித முகமும், காளையின் உடலும் அமைந்த ஒன்று. இதற்கு பரந்துவிரிந்த இரண்டு செட்டைகளும் இருக்கின்றன.16 அடி உயரம் கொண்ட இந்த விசித்திர சொரூபம் அசரீய பேரரசின் ஆதிக்கத்தை விளக்கிடும். ஆதார சான்றாக இருக்கிறது. அசரீயாவின் தலையீடுகள் பற்றி 2 ராஜாக்கள் மற்றும் 2 நாளாகமம் பத்தகத்தில் நாம் வாசிக்கிறவைகள் உண்மையென இச்சொரூபம் சாட்சி கூறுகிறது. அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் மணிராஜ் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. சாம் ஆனந்த அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. ஜான்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு



















## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

69602390

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only